**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 08.04.2026</u>**

**OS.02/2021**

**வா.சா.2 திரு.பெருமாள்கவுண்டர்**
**வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**
**<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எதற்காக நான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன் என்றால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து சம்மன் ஏதாவது வந்ததா என்றால் இல்லை, ஆனால் மாரி என்னை சாட்சியம் அளிக்க கூப்பிட்டார் அதனால் வந்தேன். செல்லகவுண்டருக்கும், ராஜாத்திக்கும் திருமணம் நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். செல்லகவுண்டருக்கும், ராஜாத்திக்கும் எத்தனை குழந்தைகள் என்றால் சின்னதம்பி, சகாதேவன் ஆகியோர், மேற்படி சகாதேவன் உயிருடன் இல்லை, அவருக்கு இரண்டு பையன். செல்லகவுண்டருக்கும், ராஜாத்திக்கும் நடந்த திருமணம் சட்டப்படி விவாகரத்து ஆகவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. செல்லகவுண்டரின் இரண்டாவது மனைவி பெயர் என்ன என்றால் பாஞ்சாலை. செல்லகவுண்டர் முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதே அவர் இரண்டாவது திருமணம் செய்துகொண்டார் என்றால் செல்லகவுண்டரின் முதல் மனைவி வேறு திருமணம் செய்துகொண்டதால், செல்லகவுண்டரும் இரண்டாவது திருமணம் செய்துகொண்டார். செல்லகவுண்டர் இரண்டாவதாக திருமணம் செய்துகொண்டார் என்பதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை என்றால் சரிதான்.

2) என்னை சாட்சியம் அளிக்க அழைத்துவந்த மாரி என்னை பொய் சாட்சியம் அளிக்க சொன்னதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியும், அது சுமார் 7 ஏக்கர் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண், அதன் நான்கு புற எல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது. செல்லகவுண்டரின் வாரிசுகள் யார் யார் எவ்வளவு நிலம் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் அவர்கள் ஏற்கனவே பாகம் பிரித்துகொண்டார்கள், அதன்படி அதனை அனுபவம் செய்து வருகிறார்கள். அவ்வாறு பாகப்பிரிவினை செய்தது 40 வருடத்திற்கு முன்பு இருக்குமா என்றால் இல்லை, 20 வருடத்திற்கு முன்பு அவ்வாறு பிரித்துக்கொண்டார்கள். அவ்வாறு பாகம் பிரித்ததில் நானும் முன்னின்று பாகம் பிரித்துகொடுத்தேனா என்றால் நான் போகவில்லை, ஆனால் செல்லகவுண்டர் அவரது வாரிசுதாரர்களுக்கு பாகம் பிரித்து கொடுத்ததாக என்னிடம் சொன்னார். மாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.04.08 15:53:49 +0530